2014 பிப்ரவரி 19]

வருகிறார்கள். மேலும், ஆதமங்கலம் புதூருக்கு, வெளியூரிலிருந்தும் வியாபாரிகள் வந்து ஏலத்தில் பங்குகொள்ள வாய்ப்பு அதிகம் இல்லை என்ற சூழ்நிலை நிலவுவதால், விவசாயிகள் விளைப்பொருட்களை அதிக விலைக்கு விற்று பயனடைய வாய்ப்பு குறைவாக உள்ளது. இருந்தாலும் தேவை ஏற்படும்பட்சத்தில், விவசாய விளைப்பொருட்களின் வரத்து மற்றும் ஏலத்தில் பங்குகொள்ளும் விவசாயிகள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான விவரங்கள் கேசரிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

82—

நியாய விலைக் கடை கட்டடம்

*6603—**திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஊராட்சி ஒன்றியம், மேலாமத்தூர் ஊராட்சி, எம். மீனாட்சிபுரம் கிராமத்திலுள்ள பகுதிநேர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஒன்றியத்தில் உள்ள ஆனைக்குட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் இரண்டு முழுநேர நியாய விலைக் கடைகளையும், ஒரு

பகுதிநேர நியாய விலைக் கடையையும் நடத்தி வருகிறது. ஆனைக்குட்டம் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள எம். மீனாட்சிபுரத்தில் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டுவதற்கு துறை அளவில் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தபின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலாமத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த பாவாலக்குறிச்சி, உப்புக்கோட்டை, மீனாட்சிபுரம் ஆகிய கிராம மக்கள் பக்கத்திலுள்ள ஆனைக்குட்டத்திற்கு 4 கி.மீ. தூரம் பயணம் செய்து ரேஷன் பொருட்களை வாங்கி வருகின்றனர். மேற்கு மீனாட்சிபுரம் கிராமத்திலேயே பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க முடிந்தால், இந்திராநகர், மீனாட்சிபுரம், எம். மீனாட்சிபுரம், உப்புக்கோட்டை, பாவாலக்குறிச்சி மற்றும் அருந்ததியர் காலனியைச் சேர்ந்த 295 மக்கள் அதனால் பயனடைவார்கள். அதனால் மேற்கு மீனாட்சிபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை துறை ரீதியாக பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*